RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22275

OPEN ACCESS

# ஜி. திலகவதியின் கல்மரம் புதினம் சுட்டும் சமுதாயச் செல்நெறிகள்

**சொ. தனலட்சுமி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# G. Thilakavathi's Kalmaram Novel Points to Social Norms

**S. Dhanalakshmy** [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: dhanamyun1982@gmail.com

Received: 21-09-2022
Revised: 01-11-2022
Accepted: 06-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Among the contemporary writers, Thilagavathy's literary works emphasises on the development and improvement of the people who belong to the low income sector. In particular, the plight of the construction workers is still worse. The novel, Kalmaram draw on the upliftment of the construction industry as a conceptual tool. The novel enkindles the concept through the women characters who protest and raise voice against the highclass society. This novel discloses the suffering, misery, burden, oppression and misfortune of the construction workers through its fictional characters. This study exposed the deplorable condition of workers in the construction industry in the novel. This research paper provides insight into the plight of the construction workers in general and the actions to be taken by the authorities in with specific considering the outrageous state of common workers.

**Keywords:** Thilagavathy, Women Writer, Society, Kalmaram

## முன்னுரை

மனித குலத்தின் ஆக்கச் சக்தியாக விளங்குபவர்கள் தொழிலாளர்கள். தொழிலாளியின் வாழ்க்கையில் இயந்திர மாயமாகும் தொழில்கள் அவனுடைய மனித சக்திக்குச் சவாலாகின்றன. ஆட்குறைப்பு, கூலிப் பிரச்சனைகளும் அவர்களுடைய வாழ்க்கைக்குத் தடையாக நிற்கின்றன. கட்டிடத் தொழிலாளர்கள் வெறும் கல் மண் சுமந்து கட்டிடங்களை உருவாக்கும் சாதாரண மனிதர்கள் அல்லர். மாறாக மாடமாளிகைகளை உருவாக்கும் அற்புதமான திறன் பெற்றவர்கள் என்றே கூறலாம். இப்புதினம் (கல்மரம்) பல்வேறு கதாபாத்திரங்களைக் கொண்டு கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்வியல் இன்னல்களையும், வாழ்நிலையையும் கண்முன்னே படம் பிடித்துக் காட்டுகிறது என்று கூறலாம். அந்த வகையில் திலகவதியின் கல்மரம் என்கிற புதினம் கட்டிடத் தொழிலாளர்களுக்கு எவ்வகையான இன்னல்களை இச்சமூகம் விளைவிக்கின்றன என்கின்ற கருத்தாக்கத்தினை வெளிக்கொணர்கின்ற முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகின்றது.

## கதைக்களம்

'கல்மரம்' என்கிற நாவலின் கதைக்களம் சென்னை மாநகரில் ஊருக்கு ஒதுக்குப்புறமாக வாழக்கூடிய கட்டிடத் தொழிலாளர்களின் பிரச்சினையை மையமிட்டு அமைகின்றன. அன்றாட வாழ்க்கையில் தங்களுடைய அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்துக் கொள்ள முடியாத

பணத்தட்டுப்பாடு அவர்களிடையே நிலவுகிறது. உண்ணும் உணவிற்கும், வேலைக்கும் தேடல் என்கிற நிலையேத் தொடர்கிறது.

கட்டிடத் தொழிலில் ஏற்பட்ட விபத்தில் தன் கணவனை இழந்து தவிக்கும் ஒரு தாயின் அவலநிலைக் கதைக்களமாக விரிகின்றன. மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறோம் என்று வருந்திய நிலையில், கிடைக்கின்ற ஊதியத்தில் வாழ்க்கையை ஓட்டுகின்ற நிலை ஆதிலட்சுமிக்கு வாய்க்கப்பட்டுள்ளது. தன் கணவனுக்கு நேர்ந்த துன்பம் மகனுக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கும் ஒரு தாயின் உள்ளம் சிறப்பிற்கு உரியவைத் தான். இருப்பினும் நான்காம் வகுப்பு வரை படித்த காசி என்ற தன் மகனுக்கு பத்தாம் வகுப்பு வரை படித்த ராகினியை திருமணம் செய்து வைத்திருப்பது சாமர்த்தியம் தான்.

கல்மரம் நாவலில் ராகினியின் பங்களிப்பு அவளுடைய சிந்தனை அறிவினைத் தூண்டி தோழியர்களின் (சுசீலா, காவேரி) உதவியுடன் தொழிலாளர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி முதலாளி வர்க்கத்தை கேள்வி கேட்கின்ற அளவிற்கு உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி நிறுத்துகின்ற பணியில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்ளும் ஒரு பெண் போராளியாக சுசீலா, ராகினி, காவேரி போன்ற கதாபாத்திரங்கள் படைத்துக் காட்டப்பட்டுள்ளன.

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் முதலாளியாக ஆர்.ஆர்.எம் என்கிற கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. எப்பொழுதும் அவர் தொழிலாளர்களை கண்டால் சிடுசிடுவென்று தான் இருப்பார். அவரைப் பொறுத்தவரை வேலை நடந்துக்கொண்டே இருக்கவேண்டும். குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் கட்டிட வேலை முடிந்தாக வேண்டும் என்பதிலேயே குறியாக இருப்பார். தொழிலாளர்களுக்கு கட்டுமான பணியில் விபத்து ஏதாவது நேர்ந்தால் அதனை கண்டும் காணாமலும் இருப்பார். பரிவுக்காக யாராவது கேள்வி கேட்டுவிட்டால் அவர்களின் வாயை அடைக்க தன்னிடமுள்ள பணபலத்தால் ஐம்பது அல்லது நூறு ரூபாய் கொடுத்து சரி செய்துவிடுகின்ற மனநிலை கொண்டவராகவே படைத்துக்காட்டப்பட்டுள்ளார்.

கட்டுமான வேலையில் அவர்களுக்கு ஏற்படுகின்ற விபத்துகளுக்கு சரியான இழப்பிட்டுத் தொகை அவர்களைச் சென்று சேர்வதே இல்லை. அதற்கு மாறாக வேலையைப் பார்க்காமல் என்ன கூட்டம் போடுகிறீர்கள் என்ற அதிகார குரல் தான் ஒலிக்கச் செய்யும். இப்படிப்பட்ட சூழலில் முதலாளியை எதிர்த்துப் போராட வேண்டும். தமக்கும் தம் சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் முன் வருவது கிடையாது. மீறி அவர்களை கேட்டால் இப்போது இருக்கின்ற வேலை கூட இல்லாமல் போய்விடும் என்கிற பயம் உள்ளூர அவர்களின் ஆழ்மனதில் பதிந்து உள்ளது என்பதையும் காண முடிகிறது.

சின்ன மீனைப் போட்டு பெரிய மீனைப் பிடிக்க நினைக்கும் ஆர்.ஆர்.எம் போன்ற பணபலம் படைத்த முதலாளிகளை கேள்வி கேட்க, தொழிற்சங்கங்களில் இணைவது தான் சிறந்த வழி என்று முடிவு செய்து அதில் வெற்றியும் பெறுகின்றனர் தொழிலாளர்கள். முதலில் ராகினியும் காவேரியும் தொழிற்சங்க விண்ணப்பத்தில் கையெழுத்து இடுகின்றனர். அதன்பிறகு மற்ற தொழிலாளர்களையும் இணைக்கின்றனர். அதன் பிறகு பல மாற்றங்களையும் கொண்டு வருகின்றனர்.

கட்டிடத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்களையும் சக மனிதர்களாக நடத்தவேண்டும் என்றும், அவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும் என்றும், அவர்களின் உழைப்பிற்கு ஏற்ற ஊதியத்தை வழங்க வேண்டும் என்றும், கட்டிட தொழில் மேற்கொள்ளும் போது விபத்து ஏற்பட்டு விட்டால் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை முதலாளி கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றுகின்றனர். அந்தவகையில் கல்மரம் என்கிற புதினம் சமுதாய மாற்றத்தை செல்நெறியாக கொண்ட இலக்கியப் படைப்பாக மிளிர்கின்றன. கீழ்க்கண்ட உட்தலைப்புகள் கொண்டு இக்கட்டுரை விரிவாக்கம் பெறுகின்றனது. தொழிலாளர்களின் இருப்பிடம், முதலாளி வர்க்கத்தின் அதிகார நிலை, கட்டிடத் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் இணைதல், தலைமுறைகளைக் கடந்து மாற்றங்களை உருவாக்குதல் ஆகிய உள்ளடக்கத்தின் கீழ் தோற்றம் பெறுகின்றன.

## தொழிலாளர்களின் இருப்பிடம்

உடல் வலிமையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு வாழக்கூடிய தொழிலாளர்களின் இருப்பிடம் இன்று வரைத் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. முதலாளிகளின் வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டாலும், அவர்களையேச் சார்ந்து வாழ்கின்ற தொழிலாளர்களின் நிலை அதளபாதாளத்தில் தான் உள்ளது. தொழிலாளர்களின் இருப்பிடம் எப்பொழுதும் சேறும் சகதியும் சூழ்ந்த பகுதியில் வசிப்பவர்களாகவேக் காணப்படுகின்றது. காசியின் மனதில் தாம் வசித்த குடிசைப்பகுதி நினைவுக்கு வரும் நிலையில் கீழ்க்கண்டவாறு அமைகிறது.

"மழை வந்த கையோடு அங்கே வெள்ளம் வந்து விடும். வழியெல்லாம் சேறும் சகதியுமாக நிறைந்துவிடும். ஒவ்வொரு குடிசையும் வெள்ளத்தின் நடுவே தனித் தனித் தீவாக திட்டாகத் தெரியும். கூரையும் ஒழுகும். அம்மாவும் கன்னியம்மாவும், காவேரியும் மழை ஒழுகும் இடங்களில் சட்டி, பானை அலுமினிய குண்டான், பிளாஸ்டிக் பாத்திரங்கள் என்று கிடைக்கின்றவற்றை வைத்துக் கொண்டிருப்பார்கள். அடுப்பைப் பற்ற வைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லாமல் தரையெங்கும் நீருறிக் கசகசக்கும். வைக்கோலை தரையில் பரப்பி அதன்மேல் பாய் விரித்துத்தான் படுக்க முடியும்." (Thilagavathy, 2005a)

என்கிற நிலை உருவாகி இருந்தது. இது ஒருபுறமிருக்க கட்டிட வேலை செய்யும் இடத்தில் கூட தொழிலாளர்களுக்கு என்று சிறப்பான இடம் ஒதுக்குவதில்லை என்கிற அவல நிலையைச் சித்தரிக்கும் வகையில் கீழ்க்கண்ட வரிகள் உணர்த்துகின்றன.

"அவங்கள்ளாம் எங்க தங்குவாங்க அட! இதென்னங்க பெரிய பிரமாதம் பின்னால் தெரியுற பொட்டல இல்லேன்னா அந்தா தெரியுற மரத்துக் கீளே. நாலு குடிசையை போட்டுக்கனா போச்சு" (Thilagavathy, 2005b)

மேலும் தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய பகுதியில் மழை வந்துவிட்டால் இன்னும் மோசமாகிவிடும். குடிசைக்குள் மழைநீர் புகுந்து துணிமணிகள், தட்டுமுட்டு சாமான்கள் கூட வெள்ளக்காட்டில் புதைந்து விடும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## முதலாளி வர்க்கத்தின் அதிகார நிலை

தொழிலாளர்கள் அனைவரும் முதலாளி வர்க்கத்தின் பிடியில் மாட்டிக் கொண்டு தன்னுடைய முகவரியை இழந்து தவிக்கின்றனர். முதலாளி x தொழிலாளி என்கிற நிலைபாடு ஆண்டான் அடிமை என்கிற நிலையிலேயே தொடர்ந்துக் கொண்டே வருகிறது. தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டிக்கொண்டு அவர்களைச் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்து பார்க்கின்ற பார்வையும், அதிகார வர்க்கத்தில் ஒழிந்தபாடில்லை என்கிற உண்மை கல்மரம் புதினத்திலும் வெளிப்பட்டுள்ளது.

"ஆதாயமில்லாம எதுலயும் கால விட மாட்டேன். திருட்டுப் புரட்டு இல்லாததுங்க. இந்த செட்டு ஆளுங்க நம்ம கட்டிட வேலைக்கு என்னென்னிக்கும் உதவியா இருக்கறாப்பல வளைச்சுப் போட்டம்னா நமக்குத்தான் லாபம். ஆயிரம் வைக்க வேண்டிய இடத்தில் நூறு வச்சாலேயே இதுங்க பூரிச்சுப் போயிடும். பாரேன் நாளாவட்டத்திலே நமக்கு இவங்களால ரொம்ப சௌரியமிருக்கப் போகுது" (Thilagavathy, 2005a)

மேலும் ஆர்.ஆர். எம்மின் முகம் சிவந்த நிலையில் "பற்களை நறநறவெனக் கடித்தான். திருட்டுப் பொறுக்கிங்க. யாரடா ஏமாத்துறீங்க? என்று கத்தினான். கலப்பட சிமெண்ட்ட வச்சாடா என் பில்டிங்க கட்றீங்க. இன்னியோட வேலய நிறுத்துங்க. திருட்டு நாயிங்க என் பேர கெடுக்கப் பாத்தீங்களாடா? முதல்ல போய் உங்க மேல போலீசுக்கு கம்ப்ளைன்ட் தரப்போறேன்" (Thilagavathy, 2005a)

என்று உச்ச நிலையில் தொழிலாளர்களை கடிந்து கொண்டான். மேலும் அடுக்குமாடி கட்டிடத்தில் வேலை பார்க்கும் ஒரு சின்ன பொண்ணுக்கு வலிப்பு வந்த நிலையில்,

"என்னையா இது எழவு. எப்பப் பார்த்தாலும் இதே கருமமா? இது வேல நடக்கிற எடமா, தர்ம சத்திரமா? எப்பவாவது நான் வர்ற நேரத்தில் அவங்கவங்க வேலய அவங்கவங்க பார்த்துகிட்டு இருந்திருக்கிறீங்களாய்யா?" (Thilagavathy, 2017)

என்றும் கடிந்துக் கொள்கிறான். மேலும் தொழிலாளி ஒருவன் வேலைப் பார்த்ததற்கு சம்பளம் கேட்கும் நிலையில் ஐயா இன்னும் போனவாரச் சம்பளமும் கைக்குக் கிடைக்கல. ரொம்ப கஷ்டமாயிருக்குது என்று கூறும் பொழுது,

"போய்யா மூடிக்கிட்டு வெறுப்போடு கத்தினார் ஆர்.ஆர்.எம் வேல பாக்குற லட்சணத்துக்கு சம்பள பாக்கி ஒரு கேடு. எனக்கு ஆகாசத்திலிருந்து பணம் கொட்டுதா?" (Thilagavathy, 2017)

என்று அமைந்துள்ளது. இவ்வாறாக பல்வேறு நிலைகளில் தொழிலாளர்களை மனிதர்களாக மதிக்காமல் அடிமைகளைப் போன்று நடத்துகின்ற அதிகாரக் குரல் புதினம் முழுவதும் சிதறிக்கிடக்கின்றன.

## கட்டிடத் தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தில் இணைதல்

ஒட்டுமொத்த தொழிலாளர் சமூகம் முதலாளியின் ஆட்சி அதிகாரத்திற்கு உட்பட்டு நடப்பதைக் காட்டிலும் தங்களுடைய உரிமையை போராடித்தான் பெற வேண்டும் என்று முடிவு செய்து தொழிற்சங்கங்களில் இணைய முற்படுகின்றனர். தொழிலாளர்களை ஒன்று திரட்டி, அவர்களை வழிநடத்திச் செல்லுகின்ற பணியில் சுசீலா, ராகினி, காவேரி ஆகியோரின் பங்கு இங்கு குறிப்பிடத்தக்கது. தொழிலாளர் இன்றி எதையும் சாதிக்க முடியாது. "தமது சக்தியை வேலை நிறுத்தம் மூலம்தான் தொழிலாளி வர்க்கம் உணர்த்தும்" என்பார் லெனின். சங்கம் அமைத்து வர்க்க ஒற்றுமையை வெளிப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என உணரும் கட்டிடத் தொழிலாளர்களின் உணர்ச்சிப் பெருக்கை அழகுற எடுத்துக் காட்டுகின்றார் ஆசிரியர்.

"கொல்லு வேலைக்காரங்கன்னாவே என்னமோ அடிமைங்கங்கற மாதிரியாயிடிச்சி என்று அலுத்துக் கொண்ட சங்கரன் என் தம்பி கூடதான் மில்லுலே வேல செய்யறான். எந்தம்பி கூட அதுல மெம்பரு. இத்தினிக்கும் அவன் அங்க வேலக்கிச் சேர்ந்து ஆறு மாசந்தான் ஆவுது. வேலக்குத் தக்க கூலி, அனுபவத்துக்குத் தக்க புரமோஷன் இல்லேன்னாலும் மானம், மருவாதி கெடாதுங்கறான். நம்பளுக்கும் அப்பிடிச் சங்கம் இருந்திச்சுன்னா இப்பேர்பட்ட அநியாயம் அக்கிருமம் நடக்கறப்ப தட்டிக் கேக்கலாம்" (Thilagavathy, 2017)

என்கிற வரிகள் மூலம் தொழிற்சங்கத்தில் இணைவதற்கான அடித்தளம் போடப்படுகின்றது என்றே கூறலாம்.

"மாநில சங்கத்தில் போன அஞ்சு வருஷமாகவே பொண்ணுங்களுக்கு கொத்தனார் ட்ரெய்னிங் கொடுக்கறாங்க. பத்து மாசப் பயிற்சி. இந்தப் பத்து மாசத்துக்கும் பணம் தாராங்க. அது டில்லியிலிருந்து வருது. தொழிலாளர் நன்மைக்குன்னே இருக்கிற டிபார்ட்மெண்டு அதப் பண்ணுது என்றாள் சுசீலா." (Thilagavathy, 2017)

பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்கிற நம்பிக்கை ஒளியையும் எழுப்புகின்றன.

"ஒரு மாற்று ஏற்பாடில்லாமல் இந்தத் தொழிலாளர்களை வேலயவிட்டு வெளியில் கொண்டு வந்து நிறுத்த வேணாம். இதுக்கு நாம் சமரசம் செஞ்சுகிட்டோம்னு என்று அர்த்தமில்ல என்று சுசிலா தெளிவாகச் சொன்னாள். இவங்களயெல்லாம் முதல்ல நாம்ப தொழிற்சங்கத்தில் சேர்க்கணும் நாம்ப தனியா இல்லங்கற உறுதி இவங்களுக்கு வரணும்." (Thilagavathy, 2017)

என்று தொழிற்சங்கம் துவங்க கூட்டு முயற்சியினை ஏற்படுத்துகின்றனர். அதற்கு முதல் வேலையாக ராகினியும் காவேரியும் தொழிற்சங்கத்தில் அனைவரையும் இணைக்கின்ற உறுப்பினர் படிவத்தை நிரப்பிக் கொடுத்தப் பின் இனி தம்முடைய வாழ்க்கையில் விடியல் தான் காணப்படும் என்று பெருமிதம் கொள்கின்றனர். இனி ஆர்.ஆர்.எம் நம்முடைய கணக்கு பாக்கியை கொடுத்த பிறகுதான் அடுத்த வேலையை தொடங்க முடியும் என்று யூனியன் மூலமாக கடிதம் அனுப்புவாங்க

என்றும், ஒற்றுமைப்பட்டு தொழிலாளி வர்க்கத்தைவிட உலகத்தில் பலமானது எதுவுமே இல்லை என்று ஜீவா சொல்லி இருக்கிறார் என்கிற கருத்தின் வழி தொழிற்சங்க ஒற்றுமையைப் பற்றித் தெரிந்துக் கொள்ள முடிகிறது.

## தலைமுறைகளைக் கடந்து மாற்றங்களை உருவாக்குதல்

தொழிலாளர்கள் தங்களோட பலத்தை உணர்ந்துவிட்டால் பாதி பிரச்சனை தீர்ந்துவிடும் என்கிற நம்பிக்கையை தலைமுறைகளைக் கடந்து மாற்றங்களை உருவாக்க விழைகின்றனர்.

"நீங்க வாழ்த்தறதெல்லாம் சரிதான் தாத்தா. ஆனா ஒழப்ப ஒருத்தன் நாம்ப விடக்கூடாது. சுசிலாக்கா சொல்றாப்பல நம்ப உரிமையை நாம்ப போராடிதான் அடைஞ்சாவணும்" (Thilagavathy, 2017) என்பதில் வெளிப்படுகிறது. தொழிலாளர்கள் அனைவரும் மருத்துவமனையில் கண்ணியம்மாளுக்கு பிறந்த குழந்தையின் மூலம் ஒரு புதிய தலைமுறை இந்தப் பூமியைத் தொட்டு புதிய காற்றை சுவாசிப்பது போல் உணர்ந்தனர். அடுத்து வரக்கூடிய தலைமுறை ஒரு புத்தம் புதிய சமுதாய விடியலை நோக்கி செல்வதாக அழகுற வெளிப்படுத்துகின்றார் நாவலாசிரியர்.

## முடிவுரை

இக்கட்டுரையின் மூலம், திலகவதியின் புதினம் வழியாக சமுதாய மாற்றத்திற்கான விதை தொழிலாளர்கள் மத்தியில் விதைக்கப்பட்டுவிட்டது என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது. புதினத்தில் கையாளப்பட்டுள்ள பெண் கதாபாத்திரங்களின் வழி பெண்களின் துணிச்சலான ஆளுமைத் தன்மை வெளிப்பட்டுள்ளது. மேலும் சமுதாய மாற்றம் காண பெண்களும் தங்களுடைய பங்களிப்பினைச் சிறப்பாக செய்து வருகின்றனர் என்பதை ஒவ்வொரு பெண் கதாபாத்திரங்களும் நிரூபிக்கின்றன.

## References

Thilagavathi, G. (2005a) Kalmaram, Amrudha Pathippagam, Chennai, India

Thilagavathi, G. (2005b) Kalmaram, New Century Book House, Chennai, India.

Thilagavathi, G. (2017) Kalmaram, Amrudha Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License